## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு.P.மணிபாரதி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## வணிகவரி மற்றும் பதிவுத் (எம்2) துறை

அரசாணை (3ப) எண்.11

நாள் 03.02.2020
விகாரி, தை–20,
திருவள்ளுவர் ஆண்டு–2051.

படிக்கப்பட்டவை:

1. பதிவுத்துறைத் தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/2018–2, நாள் 28.12.2018.
2. பதிவுத்துறைத் தலைவரின் கடிதம் எண்.13335/கே2/2018, நாள் 13.11.2019 மற்றும் 24.12.2019.

******

**ஆணை:-**

பதிவுத்துறையில், விருத்தாச்சலம் பதிவு மாவட்டத்தில் திருமுட்டம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 30.09.2017 அன்று காலமான திரு.து.பன்னீர்செல்வம் என்பவரின் மனைவி திருமதி.P.தமிழ்செல்வி, தமது மகன் திரு.P.மணிபாரதி என்பவருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 10.02.2018–ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்த பதிவுத்துறைத்தலைவர், திரு.P.மணிபாரதி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளைப் பெற்றிருந்தபடியால், அவருக்குக் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கியுள்ளார். அதன்படி, திரு.P.மணிபாரதி, 09.01.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.P.மணிபாரதி, இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப் படுத்துவதற்கு பதிவுத்துறைத் தலைவர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்குச் செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 01.08.2018 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.100–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படும் பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், பதிவுத்துறைத்தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பதிவுத்துறையில், விருத்தாச்சலம் பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.P.மணிபாரதி என்பவருக்கு 09.01.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அவர் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணி வரன்முறைப்படுத்துவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள் ஏதுமிருப்பின், நடைமுறையிலுள்ள விதிகளின்படி, அவற்றைப் பெற்றிடத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.939/ட்டி1/2020-2, நாள் 23.01.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.2968/ஜி2/2020-1, நாள் 29.01.2020-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.பாலச்சந்திரன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.
✓திரு.P.மணிபாரதி, இளநிலை உதவியாளர்,
விருத்தாச்சலம் பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)

<u>நகல்:</u>
தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (ட்டி1)த்துறை, சென்னை-9.
பணியாளர் (ம) நிருவாக சீர்திருத்த(ஜி2)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

4/2/2020
பிரிவு அலுவலர்.

9/1/2020